



# பெண்கள் பெயரில் சொந்த ஆட்டோ!

## ஓட்டுநர் துறையில் சமத்துவ அரசு

**திராவிட மாடல் அரசு**

76

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்தே, பெண்களுக்கு எனப் பல தனிச்சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூகநீதி என்பதன் பொருள், ஆண்-பெண் சமத்துவத்தையும் உள்ளடக்கியது என்பதை உலகுக்குப் பறைசாற்றும் வகையில், பல புதுமையான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.

பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணம், மகளிர் உரிமைத் தொகை போன்ற திட்டங்கள் சமூகநீதி ஆட்சியின் முன்னோடித் திட்டங்களாக, இந்திய அளவில் கவனம் பெற்றுள்ளன. அதற்குக் காரணம், அவை நலத்திட்டங்கள் என்கிற பெயரில், பெண்களுக்கு அளிக்கப்படும் அதிகாரம். தனித்து இயங்குவதற்கான நம்பிக்கை அளித்தல்.

### புதிய ஆட்டோ வாங்க...

அந்த வகையில், மோட்டார் வாகனத் துறையிலும் பெண்கள் தங்கள் முத்திரையைப் பதிக்கவும், பொருளாதார நிலையை மேம்படுத்தவும், திராவிட மாடல் அரசு புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும், ‘தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள், தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியம்’ மூலம் பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் புதிய ஆட்டோ வாங்க ரூ.1 லட்சம் மானியம் அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி, அதை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார், நம் முதலமைச்சர்.

இந்தத் திட்டத்தினை கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் முதலமைச்சர் அறிவித்தார். அறிவித்த சில மாதங்களிலேயே திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது என்பதுடன், நிர்ணயித்த இலக்கு எட்டப்பட்டு, திட்டம் நடப்பு ஆண்டுக்கும் நீட்டிக்கப் பட்டுள்ளது. திட்டம் முழுக்க முழுக்க பெண்களுக்கானது என்பதால், திட்டத்தின் வெற்றி, பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி வகுத்துள்ளது.

தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்யவும், அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், தமிழக அரசால் 18 நலவாரியங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த வாரியங்களில் சுமார் 14 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக, ‘தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள், தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரிய’த்தில் சுமார் 2 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர். அவர்களில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை சொற்பம்தான்.

### பெண் ஓட்டுநர்களை ஊக்குவிக்க...

பெண்கள் அனைத்துத் துறைகளிலும் கோலோச்சி வரும் நிலையில், அமைப்புசாரா தொழில்களில் ஆட்டோ ஓட்டுநராக பணியாற்றுவோரை விரல்விட்டு எண்ணிவிட லாம். எனவே, இந்த வாரியத்தில் பதிவுபெற்ற பெண் ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாங்குவதை ஊக்குவிக்கவும், சுயதொழில் வாய்ப்பை உருவாக்கவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 500 பெண் ஓட்டுநர்களுக்குப் புதிதாக ஆட்டோ வாங்கு வதற்கு தலா ரூ.1 லட்சம் மானியமாக வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.



### விண்ணப்பிப்பது எப்படி ?

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் கீழ் செயல்படும் ‘தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள், தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரிய’த்தில் பதிவு செய்துள்ள பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

சம்பந்தப்பட்ட வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் தலைவர் அல்லது பொதுச் செயலாளர் / தொழிலாளர் உதவி ஆய்வாளர் / கிராம நிர்வாக அலுவலர் / வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடமிருந்து பணிச் சான்றிதழ் பெற்று (பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில்) பதிவேற்ற வேண்டும்.

சென்னை மாவட்டத்திற்கு வருவாய் ஆய்வாளர் கையொப்பமும் பிற மாவட்டத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் கையொப்பமும் பெற்று பதிவேற்ற வேண்டும்.

அடையாளச் சான்றுகளாக ஓட்டுநர் உரிமம், பள்ளிச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, பதிவுசெய்யப்பட்ட மருத்துவர் சான்றிதழ் அல்லது அரசு மருத்துவ மனையின் சிவில் சர்ஜன் பதவிக்குக் குறை வில்லாத மருத்துவ அலுவலரின் சான்றிதழ் ஆகியவற்றைப் பதிவேற்ற வேண்டும்.

நீண்ட காலமாக ஓட்டுநராக இல்லாத பெண்களும், நலவாரியத்தில் பதிவு செய்யலாம். வேறு வாரியங்களில் பதிவு செய்துள்ள பெண்களும், ஆட்டோ ஓட்டுநராக விருப்பம் இருந்தால், வாரியத்தினை மாற்றிக்கொண்டு புதிய ஆட்டோ வாங்க மானியத்துக்கு விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு : 18 வயது முதல் 55 வயது வரை.

### பெண்கள் பெயரிலேயே ஆட்டோ!

பெண்களுக்குப் பொருளாதார சுதந் திரத்தினை அளிக்கக் கூடிய இந்தத் திட்டத்தில், மானியத் தொகை, பெண் ஆட்டோ ஓட்டுநர் பெயரிலேயே வழங்கப்படும். அவர் பெயரிலேயே ஆட்டோ பதிவு செய்யப்பட வேண்டும். 3 ஆண்டுகளுக்குப் பெயர் மாற்றம் செய்ய முடியாது.

ஆட்டோ டீலர்கள் மூலம் வாகனக் கடன் வழங்கவும் வழிவகைகள் செய்யப்பட்டன.

திட்டம் தொடங்கிய அடுத்த சில மாதங்களி லேயே, முதற்கட்டமாக 141 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு புதிய ஆட்டோக்களுக்கான பதிவுச்சான்று, அனுமதி ஆவணங்களைக் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற நிகழ்வில் முதலமைச்சர் வழங்கினார். அதன் பின்னர், சுதந்திர தின நிகழ்வில் பேசிய முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தில் திருநங்கை ஓட்டுநர்களும் பயன்பெறலாம் என அறிவித்தார்.

அதையடுத்து, பயனாளிகளின் விண்ணப் பங்கள் அடிப்படையில் இரண்டாம் கட்டமாக கடந்த ஆண்டு அக்டோபர் 5-ஆம் தேதி தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில் 2 திரு நங்கை ஓட்டுநர்கள் உள்பட 148 பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோக்களை வழங்கிய முதல்வர், அவற்றைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். அந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 477 பெண் ஓட்டுநர்கள் பயன்பெற்றுள்ளனர். மீதமுள்ள 23 பயனாளி களுக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**இப்போது சென்னையில் பல பகுதிகளில் பெண் ஆட்டோ ஓட்டுநர்களை நீங்கள் பார்க்கலாம். அடுத்த 1,000 பெண் ஓட்டு நர்களுக்காக ஆட்டோக்களும் காத்திருக்கின்றன.**

இந்தத் திட்டத்துக்குக் கிடைத்த வரவேற்பு மற்றும் பெண் ஓட்டுநர்கள் விண்ணப்பம் செய்வது அதிகரித்துள்ள காரணத்தால், நடப்பு ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தில் மேலும் 1,000 பெண் ஓட்டுநர்கள், ஆட்டோ வாங்குவதற்கான மானிய அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை முன்னெடுத்த ஒரு திட்டம், தற்போது அடுத்தடுத்த துறைகளுக்கும் பரவலாக்கம் காண்கிறது. நடப்பு ஆண்டு கூட்டத் தொடரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் **‘பிங்க் ஆட்டோ’** அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

பெண்கள் விமானமே இயக்கிக் கொண்டி ருக்கும் காலத்தில், ஆட்டோ ஓட்டுவதற்கு உள்ள தடையை உடைக்க வேண்டும் என அரசு நினைத்து, அதை மாற்றிக் காட்டியிருக்கிறது. இப்போது சென்னையில் பல பகுதிகளில் பெண் ஆட்டோ ஓட்டுநர்களை நீங்கள் பார்க்கலாம். அடுத்த 1,000 பெண் ஓட்டு நர்களுக்காக ஆட்டோக்களும் காத்திருக்கின்றன.

**...சாதனை தொடரும்**

### நாட்டு எல்லைகளைக் கடந்த திராவிட மாடல்!

திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள், தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார மாற்றத்துக்கு வழி வகுத்துக் கொண்டிருப்பதைக் கண்முன்னால் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ‘காலை உணவுத் திட்டம்’, ‘நான் முதல்வன்’ ஆகிய திட்டங்களின் வெற்றி என்பது, கல்வியிலும், வேலை வாய்ப்பு உருவாக்கத்திலும் தமிழ்நாட்டு மாணவர்களை பல படிகள் முன்னே கொண்டு செல்லக்கூடிய திட்டங்கள்.

தமிழ்நாட்டு அரசின் மக்கள் நலத்திட்டங்கள் பலவற்றையும் தற்போது, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்கள் செயல்படுத்துவதற்கான முனைப்பில் உள்ளன. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் திராவிட மாடல் பாடமாக உள்ளதை நாடாளுமன்றத்தில், தமிழ்நாட்டு உறுப்பினர்களும், இந்தியா கூட்டணி உறுப்பினர்களும் உரத்து முழங்குகின்றனர்.

இந்த நிலையில், நடந்து முடிந்த பிரிட்டன் தேர்தலில் தமிழ்நாட்டின் மக்கள் நலத் திட்டங்களைப் பிரதியெடுத்தது போலவே, அங்குள்ள தொழிலாளர் கட்சித் தேர்தல் வாக்குறுதிகளை அளித்து வெற்றி பெற்றுள்ளது. கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளில் சொல்லாத பலவற்றையும் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். அந்த வகையில், ஆட்சிக்குப் பின் தொடங்கப்பட்ட, ‘நான் முதல்வன்’, ‘கலைஞர் கனவு இல்லம்’, ‘காலை உணவுத் திட்டம்’ ஆகியவற்றை, பிரிட்டனின் தொழிலாளர் கட்சி வாக்குறுதிகளாக அளித்துள்ளது.

இலவசக் கல்வி, இலவச உணவு வேண்டும் என தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று, தங்களது தேர்தல் வாக்குறுதிகளில் சேர்த்திருந்தது, பிரிட்டன் தொழிலாளர் கட்சி. இப்போது, 14 ஆண்டுகளுக்குப் பின் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பினையும் பெற்றுள்ளது. திராவிட மாடல், சமூக நீதிச் சிந்தனைகள் ஆகியவை நாடு, மொழி எல்லைகளைக் கடந்து, மனிதர்களைப் பற்றி சிந்திப்பது என்பதற்கு தொழிலாளர் கட்சி வெற்றியும் உதாரணமாகி உள்ளது.

### ஃப்ளாஷ்பேக்





இரா.பாலகுரு

**முதலமைச்சருக்கு அருகில் கமாண்டர்!**

1971-ஆம் ஆண்டு மதுரை நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவித்தார், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்போது, மதுரையில் இருக்கும் அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளின் என்.சி.சி கமாண்டராக நான் பொறுப்பு வகித்தேன். மாநகராட்சியாக அறிவித்த பின், மதுரை வந்த கலைஞருக்கு என்.சி.சி. சார்பில் அணிவகுப்பு மரியாதை செய்தோம். முதலமைச்சருக்கு அருகில், கம்பீரமாக நின்றதை என்னால் மறக்கவே முடியாது.

**–இரா.பாலகுரு, முன்னாள் தலைமையாசிரியர், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**இலக்கைத் தாண்டிய நிதி!**

1952-ஆம் ஆண்டு, திருச்சி, தஞ்சை புயல் நிவாரண நிதி திரட்டுவதற்காக அமைக்கப்பட்ட குழுவினர், தொடர்ச்சியாக நாடகங்கள் நடத்தி நிதி திரட்டினர். டிசம்பர் மூன்றாவது வாரம் தொடங்கிய பணிகள், 1953-ஆம் ஆண்டு ஏப்ரல் வரை நீடித்தன. ஏப்ரல் 28-ஆம் தேதி தஞ்சையில் புயல் நிவாரண நிதி நிறைவு நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. ரூ.25ஆயிரம் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், கலைஞர் தலைமையிலான குழுவினர் ரூ.27 ஆயிரத்து 64 ரூபாய் திரட்டி இருந்தனர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

532

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.